மாற்றம் என்று சொல்லி கடும் விலை ஏற்றம்!

விலைவாசி உயர்வில் தமிழ்நாடு முதலிடம்! தூக்கத்தில் த.வெ.க. அரசு!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் பேட்டி!

சென்னை,அக்.15-

மாற்றம் என்று சொல்லி விலை ஏற்றத்தைக் கொடுத்துள்ளது த.வெ.க. அரசு என்றும் விலைவாசி உயர்வில் நம்பர் 1 - தமிழ்நாடு. தூக்க நிலையில் த.வெ.க. அரசு உள்ளது என்று கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வைக் கண்டுகொள்ளாத தவெக அரசைக் கண்டித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அளித்த பேட்டி வருமாறு:

தமிழ்நாட்டில் மாற்றத்தை தரேன்னு சொல்லி ஆட்சிக்கு வந்த விஜய் சர்க்கார் மிகப் பெரிய ஏமாற்றத்தை கொடுத்தது மட்டுமில்லாமல் விலை ஏற்றத்தை கொடுத்திருக்கு. தமிழ்நாட்டு மக்கள் வந்து விலை மதிப்பில்லா அந்த வாக்குகளை விஜய் சர்க்காருக்கு அளித்து இன்றைக்கு வந்து ஒவ்வொரு பொருளுடைய விலை மதிப்பையும் கூட்டி இருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு சாதாரண, சாமானிய மக்கள் பயன்படுத்துற அரிசி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 25 கிலோ, 26 கிலோ உள்ள ரைஸ் பேக் 1400 ரூபாய்க்கு விற்றது. இன்னைக்கு இருக்கக்கூடிய தவெக ஆட்சியில் 1800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இட்லி அரிசி வந்து 900 ரூபாய்க்கு விற்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், இன்னைக்கு புண்ணியவான் விஜயோட ஆட்சியில் 1200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அதே மாதிரி துவரம் பருப்பை பார்த்தீங்கன்னா, 100 ரூபாய்க்கு குறைவாக விற்கப்பட்ட துவரம் பருப்பு இன்றைக்கு 142 ரூபாய் விற்கப்படுகிறது. உளுத்தம் பருப்பும் அதே மாதிரி இன்னைக்கு 130 ரூபாய்க்கு வந்துள்ளது. சர்க்கரை விலை அதிகமாக இருக்கிறது. பருப்பு விலை அதிகமா இருக்கிறது, எண்ணெய் விலை அதிகமா இருக்கிறது. காய்கறி விலைகள் எல்லாம் அதிகமா இருக்கிறது. தமிழ்நாட்டில் பணம் கொடுத்து கடைகளில் வாங்குகிற மக்கள் சொல்றாங்க, விலை அதிகமா இருக்குது எங்களால் வாங்க முடியவில்லை என்று சொல்றாங்க. ஆனா தமிழ்நாட்டினுடைய உணவு அமைச்சர் என்ன சொல்றாருன்னு பாருங்கள்.

அமைச்சர் வந்து அரிசி விலை ஏறவில்லை அப்படின்னு சொல்கிறார். அவர் அரிசி வாங்கி சோறுதான் சாப்பிடுகிறாரா தெரியல்லை. இப்ப நான் வேணா அமைச்சர், உணவுத்துறை அமைச்சர், அவர் ஆடிட்டரா இருந்தவர், அவருக்கு என்ன தெரியும் பாவம் கஷ்டம்! கடையில் போய் பையைப் பிடிச்சு அரிசி வாங்கியிருந்தார் என்றால் தெரியும். சாதாரண சாமானிய மக்கள் எல்லாம் வந்து கையில் பையைக் கொண்டு போய் அரிசி வாங்குறாங்க. அவங்களுக்கு அந்த கஷ்டம் தெரியும். அதனால்தான் நான் கேக்குறேன், அவர் சோறு சாப்பிடுகிறாரா என்று கேட்கிறேன். அரிசி போட்டு சோறு சாப்பிடுகிறாரா என்று கேட்கிறேன்.

நான் இப்போது உணவுத்துறை அமைச்சரை நான் சவாலுக்குக் கூப்பிடுகிறேன். அவர் இருக்கக்கூடிய மயிலாப்பூருக்கே நான் வருகிறேன். இன்றைக்கு மதியம் 5:00 மணிக்கு ரெடியா இல்ல அவர் கன்வீனியன்ட் டைமுக்கு ரெடியான்னு கேட்டுக் கொள்ளுங்கள். நான் பையை எடுத்துட்டு வருகிறேன். அவரும் பையை எடுத்துட்டு வரட்டும். ஒரு மளிகைக் கடைக்குப் போகலாம், பொருளை வாங்கலாம்; காய்கறி கடைக்குப் போகலாம், பொருளை வாங்கலாம். உள்ளபடியே விலை ஏறி இருக்கா இல்லையா என்பதை நாட்டு மக்களுக்குக் காட்ட ஊடகங்களான நீங்களும் வாங்க. இந்த ஓபன் சேலஞ்சுக்கு உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ராமன், வருவதற்கு தயாராக இருக்கிறாரா என்பதை நான் உங்க மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

விலை ஏற்றம் இல்லைன்னு பச்சை பொய்யை சொல்கிறார். ஜமக்காலத்துல கடைந்தெடுத்த வடிகட்டின பொய்யை சொல்கிறார் இவர். விலை ஏறவில்லை என்று இன்றைக்கு விலைவாசி எப்படி இருக்கிறது என்று தினம் தினம் பத்திரிகைகளில் வருகிறது. காய் என்ன, கறிக்காய் விலை என்ன விற்கிறது, உளுந்து என்ன விற்கிறது, சர்க்கரை என்ன விற்கிறது எல்லாமே இருக்கிறது. ஆனால், எதைப் பத்தியும் அக்கறை இல்லாமல் இந்த அரசாங்கம் வெறும் ரீல்ஸ் எடுக்குறதுல மட்டுமே கவனம் செலுத்துறாங்க. வாய்க்கு வந்தபடி பொய் சொல்வதை மட்டுமே இவங்க வாடிக்கையா வச்சுக்கிட்டு, இன்றைக்கு விலைவாசி ஏறவில்லை என்று சொல்கிறார்கள்.

ஒரு பக்கம் தமிழ்நாட்டுல் விலைவாசி ஏறி இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் தீபாவளி பண்டிகை வரப்போகிறது. இந்த தீபாவளி பண்டிகையெல்லாம் மக்கள் எப்படி கொண்டாடப் போறாங்கன்னு தெரியவில்லை. உடனே 'தி.மு.க.வுக்கு தீபாவளி மேல என்ன அக்கறை? யாருக்கும் இல்லாத உனக்கு ஏன் அக்கறை?'ங்கிற எந்த வியாக்கியானத்துக்கும் வந்துராதீங்க. இது சாமானிய மக்களுடைய பிரச்சினை. பண்டிகை காலங்களில் இந்தப் பொருட்களை வாங்க முடியாத அளவுக்கு கஷ்டப்படக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. ஒரு பக்கம் விலைவாசி ஏறி இருக்கிறது, இன்னொரு பக்கம் மின்கட்டணம் ஏறி இருக்கிறது. மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

தமிழ்நாட்டை முடிச்சிட்டிங்க சி.எம்.சார்!

இவர்கள் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற உடனே, முதலமைச்சரும் அமைச்சர் பெருமக்களும் அவங்களுடைய அறையில் ஒரு செய்கை காட்டினாங்க. ஆட்சிக்கு வந்த உடனே ஒரு செய்கை காட்டினாங்க. கொளத்தூரில் வெற்றி பெற்ற உடனே ஒரு செய்கை காட்டினாங்க. என்ன செய்கை அது?

நான் கேட்கிறேன் சி.எம். சார், தமிழ்நாட்டை முடிச்சிட்டீங்க சார், சுத்தமா முடிச்சிட்டீங்க சார். சாதாரண சாமானியன் வயித்துல அடிச்சிட்டீங்க சார். விலைவாசியை டாப் ரேஞ்சுக்கு கொண்டு போயிட்டீங்க சார். இன்னைக்கு தமிழ்நாடு நம்பர் ஒன், நம்பர் ஒன்னு நீங்க ரொம்ப மார்த்தட்டிக்கிட்டீங்க இல்லையா? இன்னைக்கு தமிழ்நாட்டில் விலைவாசி அதிகமா இருக்கு, நம்பர் ஒன் இருக்கு. இந்தியாவில் வேற எங்கேயுமே இல்லாத அளவுக்கு தமிழ்நாடு இன்னைக்கு முன்னேறிய மாநிலமா இருக்கிறது என்றால் அது விலைவாசியில் தான் முன்னேறிய மாநிலமா இருக்கிறது.

சாதாரணமா மார்க்கெட்ல நாமெல்லாம் போய் காய்கறி வாங்குவோம். வாங்கி முடிச்ச பிறகு என்ன பண்ணுவாங்கன்னா, இந்த கருவேப்பிலை, கொத்தமல்லியை இலவசமா கொடுப்பார்கள். இன்றைக்கு எங்கேயாவது தாய்மார்கள் என்னுடைய பேட்டியை பார்த்துக்கிட்டு இருப்பார்கள், நான் சொல்றது சரியா இல்லையான்னு அவங்களே கணக்கிடுவார்கள். இந்த கருவேப்பிலை, கொத்தமல்லி இலவசமா கொடுக்குறாங்களா யாராவது? கிடையாது. அது ஒரு கட்டு 30 ரூபாய்னு விற்கப்படுகிறது. காரணம் என்ன என்றால் விலைவாசி ஏறிப்போச்சு.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

நான் எல்லாம் கடையில் போய் காய்கறி வாங்கும் போது இலவசமாவே கருவேப்பிலையும் கொத்தமல்லியும் கொடுப்பார்கள். இப்ப அது மாதிரி கொடுக்குறாங்களா சொல்லுங்கள் பார்க்கலாம், கிடையாது. புரட்டாசி மாசத்துல நான்வெஜ் விலை கம்மியா இருக்கும் என்று சொல்லுவார்கள், ஆனா இன்னைக்கு சிக்கன் 300 ரூபாய் விற்கிறது. அப்ப என்ன விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு இவங்க நடவடிக்கை எடுத்திருக்காங்க?"

திராவிட முன்னேற்றக் கழகம் வந்து விலைவாசி உயர்வை பட்டியலிட்டு அரசின் மீது குற்றம் சுமத்துகிறது என்று ஒரு பக்கம் வாதத்தை வைத்தால் கூட, "திராவிட முன்னேற்றக் கழகம் இதை சொல்வதற்கு தார்மீகப் பொறுப்பு இருக்கா?" என்று கேட்கலாம்.

2007-ல் இதேபோல உலக அளவில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டது, இந்தியா முழுவதும் விலைவாசி உயர்ந்தது, தமிழ்நாட்டிலும் விலைவாசி அதிகமாக ஏற்பட்டது. துவரம் பருப்பு கிலோ 65 ரூபாய்னு 'தினமலர்' பத்திரிகையில் ஒரு கொட்டை எழுத்து வந்தது. அன்றைக்கு முதலமைச்சரா இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், உடனடியா உணவுத்துறை அமைச்சரா இருந்த எ.வ.வேலுவை கூப்பிட்டு, "நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார். உங்களுக்கு எல்லாருக்கும் தெரியும், தமிழ்நாட்டு மக்களுக்கு எல்லாம் தெரியும். 2007-ல் திமுக ஆட்சியில் ஸ்பெஷல் பிடிஎஸ் (Special PDS) - சிறப்பு விநியோகத் திட்டத்தை கொண்டு வந்து உளுந்து, பாமாயில், துவரம் பருப்பு - ஏன், துவரம் பருப்பு சாம்பார் இல்லாம யாரும் சாப்பிட மாட்டோம்; உளுந்து, காலையில நம்ம டிபனுக்கு இட்லி, தோசை குழந்தைகளுக்கு செஞ்சு கொடுக்கணும்னா அதுக்கு உளுந்து தேவை; எண்ணெய் இல்லாம எந்த பதார்த்தத்தையும் சமைக்க முடியாது, தாளிக்க முடியாது - அப்ப முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தி.மு.க. ஆட்சியில இந்த பொருட்களை 25 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கும் மலிவு விலையில் கொடுத்தோம். ஸ்பெஷல் பிடிஎஸ் ஜி.ஓ. போட்டு கொடுத்தோம்.

வெங்காயம் விலை அதிகமாக ஏற்றம் வந்த போது, தோட்டக்கலை துறை மூலமாக காய்கறியை ரேஷன் பொருட்கள்ல கொடுத்தோம். இது தி.மு.க. செஞ்சது. இந்த கேள்வியைக் கேட்பதற்கு தி.மு.க.வுக்கு உரிமை இருக்கான்னு கேட்டால், நிறைய உரிமை இருக்கிறது.

இப்படி ஒரு அரசாங்கம் இருக்கும்போது, ஒரு நாட்டில் ஒரு பிரச்சினை வரும்போது, அரசாங்கத்தின் பணி என்ன, கடமை என்ன? விலைவாசி ஏறி இருக்கிறது என்றால், அந்த விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு முதலமைச்சருடைய நடவடிக்கை என்ன? முதலில் முதலமைச்சர் இது குறித்து துறை ரீதியாக அமைச்சர்களையோ, அதிகாரிகளையோ கூப்பிட்டு ரிவ்யூ மீட்டிங் (Review Meeting) நடத்துனாரா? விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யணும்னு நினைச்சாரா? இல்லை. ஆனா ரீல்ஸ் போடுவதில்தான் இருக்கிறார். ரீல்ஸ் மோகத்தில் அந்த ஆட்சி இருக்கிறது.

செக்ரட்டரியட்ல முதலமைச்சர் கூப்பிட்டு, "நீங்கள் இந்த விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்குறீங்க?" அப்படின்னு ஏதாவது கேட்டிருக்கிறாரா? இன்னைக்கு வரைக்கும் கேட்க வில்லை. அந்த துறையினுடைய அமைச்சர் போற போக்குல சொல்றார், "எங்க விலை ஏறி இருக்கு?" என்று. இன்னும் பப்ளிக் எல்லாம் கூட சொல்லிருக்காங்க, அதை எங்களால போட்டு காட்ட முடியும்.

ஆட்சியின் லட்சணம்!

இவங்க என்ன செய்கிறார்கள்? வெங்காயத்தை ஒன்றிய அரசிடம் இருந்து ஒரு 700 டன் வெங்காயத்தை வாங்கி ரேஷன் கடைக்கு அனுப்பினார்கள். போன வெங்காயம் எல்லாம் சொத்த வெங்காயம். இந்த கவர்மெண்ட்டும் சொத்தையினால உடனே என்ன பண்ணிட்டாங்க? ரேஷன் கடையில் இருக்கக்கூடிய ஸ்டாப்களை சஸ்பென்ட் பண்ணிட்டாங்க. உடனே ரேஷன் கடை ஊழியர்கள் சங்கம் என்ன பண்ணாங்க தெரியுமா? "நாங்கள் போராட்டம் பண்ணுவோம்; நீ கொடுத்ததே சொத்த வெங்காயம், இதை நீங்க கொடுக்க சொல்றீங்க, இப்ப வெங்காயம் சரியில்லைன்னு சொல்லி என்னை சஸ்பென்ட் பண்ணா என்ன அர்த்தம்?" அப்படின்னு சொல்லி கேட்கிறாங்க. அப்ப நாங்கள் போராட்டம் பண்ணுவோம்னு சொன்ன பிறகு, நேற்றை அந்த ஆர்டரை வித் டிரா (withdraw) செய்திருக்கிறார்கள். இதுதான் இந்த ஆட்சியினுடைய லட்சணமா இருக்கு.

இரண்டாவது, மின்சாரப் பற்றாக்குறை ஒரு பக்கம் இருக்கிறது. கேட்டால் 'காத்து இல்லை'ங்றாங்க. என்னென்னவோ கதை சொல்கிறார்கள் பாருங்க. கரண்ட் இல்லேன்னா காத்து இல்லைங்கிறாங்க, கரண்ட் இல்லேன்னா தண்ணி இல்லைங்கிறாங்க. ஹைட்ரோ எலக்ட்ரிசிட்டி பவரும் (hydroelectricity power), விண்ட் எனர்ஜியும் (wind energy) வாங்குவதா இருந்தா ரொம்ப குறைந்த



விலையில் (available) இருந்துச்சு. இன்னைக்கு மற்ற மாநிலங்கள் எல்லாம் 20 ரூபாய்க்கு குறைவாக வாங்கிட்டு இருக்காங்க. நீங்கள் மட்டும் ஏன் 37 ரூபாய்க்கு வாங்குறீங்கன்னு கேட்டா அந்த 'கலெக்ஷன் குமார்'கிட்ட பதிலே இல்லை.

'கலெக்ஷன் குமார்' நேற்று ஒரு செய்தியாளர் மீட்டிங்கில் ஒரு பெண்மணி கேள்வி கேட்டார்கள். அந்த பெண்மணியை கேள்வி கேட்க விட்டாரா அவரு? அதை கம்ப்ளீட் பண்ண விட்டாரா அவரு? அந்த கேள்வி கேட்டவங்களை நோக்கி பார்த்து பேசுறதுக்கு தைரியம் இருக்கா? தான் தயார் பண்ணி வந்திருக்கிற நரேட்டிவை (narrative) கக்கிட்டு போயிடணும், வாந்தி எடுத்துட்டு போயிடணும் - 'கலெக்ஷன் குமார்'க்கு உள்ள எண்ணமே அதுதான். நான் என்ன நினைக்கிறேனோ, அதைத்தான் மீடியா போடணும் - 'கலெக்ஷன் குமாரின்' ஆப்ஜெக்டிவ் (objective) அதுதான், அவருடைய தாட் ப்ராசஸ் (thought process) அதுதான்.

மின்பற்றாக்குறை உங்களுக்கு தெரியுமா?

நான் 'கலெக்ஷன் குமாரிடம்' கேட்கிற ஒரே ஒரு கேள்விதான்: மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுதுன்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா? நீங்கள் அரசாங்கத்தில் நிர்வாகம் நடத்துறீங்களா இல்லையா? மக்களுக்கு எவ்வளவு மெகாவாட் தேவைப்படுகிறது? எவ்வளவு பற்றாக்குறை இருக்கு? எப்படி அதை வாங்கணும்?

ரொம்ப அதிமேதாவி மாதிரி ஒன்று பேசுனாங்க நேற்று - அதாவது பெர்மனன்ட்டா (permanently) பர்சேஸ் (purchase) பண்றதுக்கு இவங்க அக்ரிமெண்ட் (agreement) போடலன்னு. பெர்மனன்ட்டா பர்சேஸ் பண்றதுக்கு அக்ரிமெண்ட் போடலன்னா, நீ நிர்வாகம் செய்யல என்று அர்த்தம். எப்போதுமே தேவைக்கு பெர்மனன்ட்டா எப்படியெல்லாம் மின்சாரம் தேவைப்படுதோ அப்பப்ப வாங்குவார்கள். அப்போது நீ பெர்மனன்ட்டாவே இப்ப நீங்க போட போறீங்கன்னா, பவர் ஜெனரேஷனுக்காக (power generation) உங்க கிட்ட எந்த ப்ராஜெக்ட்டும் (project) கிடையாது, எந்தவொரு செயல்திட்டமும் கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடந்த காலங்களை எடுத்து பார்த்தீங்கன்னா, கலைஞருடைய ஆட்சி காலத்திலும் சரி, எங்களுடைய தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி காலத்திலும் சரி, ஐந்து ஆண்டுகளுக்கு எவ்வளவு மின் தேவைப்படுகிறது? எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது? அந்த பற்றாக்குறையை சரி செய்வதற்கு இம்மீடியட் மெஷர் (immediate measure) என்ன? லாங் டெர்ம் மெஷர் (long-term measure) பவர் ஜெனரேஷனுக்கு என்ன நடவடிக்கை எடுக்கணும்? எத்தனை புனல் மின்சாரத்தை அதிகப்படுத்தணும்? எவ்வளவு தெர்மல் பவரை (thermal power) அதிகப்படுத்தணும்? எவ்வளவு விண்ட் எனர்ஜியை அதிகப்படுத்தணும்? இதையெல்லாம் கணக்கிட்டு பார்த்து செய்யக்கூடியதுதான் ஒரு அரசாங்கம். ஆனா இதைப் பத்தி எதுவுமே இல்லாமல், வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோன்னு டெய்லி ஷோ காட்டுறாங்க.

தூய சக்திகளின் லட்சணம்!

மீடியா முன்னாடி வந்து ஒவ்வொரு மந்திரியும் - என்னடா இது, அவர்கள் தமிழ்நாட்டுக்கு தொழில்துறை மந்திரியா இல்ல ஆந்திராவுக்கு தொழில்துறை மந்திரியா தெரியல, டெய்லி ஒரு கம்பெனியை மூடி அனுப்புறாங்க. ஒரு மந்திரி வெத்தா பேசுறதுக்காகவே ஒருத்தர வச்சிருக்காங்க. இந்த 'கலெக்ஷன் குமார்' ரொம்ப தூய சக்தி, தூய சக்திங்கிறாரு. ஆனா டெய்லி அவர் எவ்வளவு கலெக்ஷன் பண்றாருங்கிறது எல்லாருக்கும் தெரியும்.

இப்ப டெண்டர் நேற்றுதான் ஆரம்பிச்சிருக்காங்க, இன்னும் அது பத்தி நிறைய விஷயங்கள் வெளிய வர வேண்டியிருக்கு. இப்போது "மேல இடத்துல முடிவு பண்ணிட்டாங்க"ன்னு ஒரு கருத்து ஓடுது. காலையில எங்ககிட்ட பல கான்ட்ராக்டர்ஸ் சொல்றாங்க, "இப்ப மறுபடியும் இவங்க சொல்றது, மேல இடத்துல முடிவு பண்ணிட்டாங்க, அவங்க இவங்களுக்கு கொடுக்க சொல்லிட்டாங்க" அப்படின்றாங்க.

தூக்கத்தில் இருந்து வெளியில் வாருங்கள்!

தூய சக்தி ரொம்ப சூப்பர் சக்தியா இருக்குது! நான் என்ன கேட்கிறேன்னா, தமிழ்நாட்டின் முதலமைச்சர் தயவுசெய்து ஆக்ஷன் மோடுக்கு (action mode) வாங்க. நீங்கள் ஸ்லீப் மோடுல (sleep mode) இருக்கீங்க. சீப் மினிஸ்டர், தூக்கத்திலிருந்து வெளியில் வாருங்கள் சீப் மினிஸ்டர். நீங்கள் இன்னும் பித்துப் பிடித்த மாதிரியே இருக்கீங்க. நேத்து கூட கனகதுர்கா கோவிலுக்கு ஆந்திராவுக்கு போயிருக்கீங்க. முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவோட இருந்தீங்க... உங்க முகத்துல ஏதாவது தெளிவு இருக்கா? சிரிப்பு இருக்கா? இதுல வேற ஒரு டிவிக்காரங்க 'ஸ்மைலி சிஎம்' (Smiley CM) போடுறாங்க, அவங்களாம் சேனல்ல இப்ப வர பிராண்ட் அம்பாஸடர் (brand ambassador) ஆயிட்டாங்க விஜய்க்கு.

நீங்கள் சிரிச்சா என்ன, சிரிக்கலன்னா என்ன? தமிழ்நாட்டு மக்கள் வயிறு எரியுது. தமிழ்நாட்டு மக்கள் அழுதுகிட்டு இருக்காங்க. தமிழ்நாட்டு மக்கள் இன்னைக்கு, "ஏன்டா இந்த அரசாங்கத்தை தேர்வு செஞ்சோம்?" அப்படின்னு இருக்காங்க. நான் ஒரு இன்ஸ்டன்ட் எக்ஸாம்பிள் (instant example), இன்ஸ்டன்ட் சாட்சி. நான் இப்பதான் தேர்தலை சந்திச்சு வரேன். கிராமப்புறத்துல தேர்தலை பார்த்துட்டு வந்தேன். குக்கிராமங்கள்ல நான் நின்னுட்டு வந்தேன். மக்கள் கிட்ட சொன்னதெல்லாம், விலைவாசி அதிகமா இருக்கிறது.

மக்களின் பிரச்சினை பற்றி கவலைப்படாத ஆட்சி!

நான் என்னுடைய பிரச்சாரத்தில் பொருட்களுடைய விலை - அரிசி விலை ஏறி போச்சுன்னா உடனே அங்கிருந்து சர்க்கரை விலை ஏறி போச்சுன்னு வரும்; அப்புறம் சர்க்கரை விலை ஏறி போச்சுன்னு நான் சொன்னேன்னா, உடனே காய்கறி விலை ஏறி போச்சுன்னு மக்கள் சொல்றாங்க. அந்த அளவுக்கு பப்ளிக் அப்டேட்டா இருக்காங்க.

ஆனா, publics-னுடைய தேவைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படல. நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பப்ளிக்கோட பிரச்சனைகள் ஒரு டிராக்ல போகுது, ஆனா உங்க அரசாங்கம் வேற ஒரு டிராக்ல போயிட்டு இருக்கிறது. இது ஒரு ஆபத்தான நிலைக்கு போயிட்டு இருக்கிறது.

அதனால், நாங்கள் மக்களுக்காக பேசுறோம், அரசியலுக்காக பேசல. நாங்கள் ஏதோ பிரஸ் மீட்டை (press meet) கொடுத்து திமுக இருப்பை காட்டிக்கணும்னு அவசியம் கிடையாது. திமுக நீங்க இருந்தால் எல்லா காலமும் என்னைக்கும் இருக்கும். திமுக ஒரு தேர்தல்ல வாஷ் அவுட் (wash out) ஆனீங்கன்னா ஆளே இல்லாம போயிருவீங்க. ஆனா பல தேர்தல்ல நாங்க தோற்றால் கூட, நாங்கள் நிற்பதற்குக் காரணம் மக்களோட நாங்கள் இருக்கோம், மக்கள் பிரச்சனைக்காக நாங்க இருக்கோம். நாளைக்கு ஒரு போராட்டத்தை அறிவிச்சு நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய போறோம்னா, அது மக்களுக்கான ஒரு போராட்டமும் ஆர்ப்பாட்டமும்.

உங்களை மாதிரி ஸ்டாண்ட்-அப் காமெடி (stand-up comedy) பண்றவங்களை கொண்டு வந்து மந்திரியா வச்சுக்கிறது, லாட்டரி வித்தவங்களை கொண்டு வந்து மந்திரியா வச்சுக்கிறது, பிளாக்கில் டிக்கெட் வித்தவங்களை கொண்டு வந்து மந்திரியா வச்சுக்கிறதுனால என்ன ஆகும்ன்னா, நிர்வாகம் தெரியாம இன்னைக்கு நீங்கள் சிக்கித் தவிக்கிறீர்கள்.

அதனால், நாங்கள் ஒரு காமன் மேனாக (common man), மக்களுடைய பிரதிநிதிகளாக, சாதாரண சாமானியனுடைய குரலாக, தயவு செய்து சிஎம் சார், தயவுசெய்து நீங்கள் மக்களின் அன்றாட பிரச்சனையான விலைவாசி உயர்வை பத்தி பேசுங்க, நடவடிக்கை எடுங்க, மக்களுக்கு அட்ரஸ் (address) பண்ணுங்க, எப்படி குறைக்கப் போறோம்னு சொல்லுங்க.

ராஜினாமா செய்ய தயாரா?

நான் அமைச்சரை கூப்பிடுகிறேன். இன்னைக்கும் நாளைக்கும் வாங்கள். விலைவாசி ஏறலன்னு சொல்றீங்களே, நம்ம ரெண்டு பேரும் மயிலாப்பூர் பஜார்ல போய் வாங்கலாம், இல்ல சிந்தாதிரிப்பேட்டை மார்க்கெட்டுல போய் வாங்கலாம், இல்ல ஊர் மார்க்கெட்ல எங்க போனாலும் போலாம் வாங்க. நான் ரெடியா இருக்கேன். நீங்கள் விலைவாசி ஏறலன்னு சொல்றீங்க, ஏறி இருக்குன்னு நான் காட்டுறேன். அப்படி ஏறி இருக்குன்னு நான் ப்ரூப் (proof) பண்ணிட்டா, மந்திரி பதவியை விட்டு விலகுவதற்கு, ராஜினாமா பண்றதுக்கு தயாரா இருக்கீங்களானு இது மூலமா நான் கேட்டுக்கிறேன்.

செய்தியாளர்: "அரசு கால அவகாசம் கேட்டாங்க, மாசமும் ஓடிருச்சு. அதிகாரிகள் இருக்கத்தான் செய்றாங்க. உரிய முறையில ஆலோசனை மேற்கொண்டு இதுக்கு ஒரு தீர்வா எதையுமே எடுக்க முடியாதா?"

பதில்: "அதைத்தான் நான் கேட்கிறேன், கால அவகாசம் கேட்கிறதை பற்றி தேவையில்லை, எதுக்கு கால அவகாசம் கேட்கிறது? நீங்கள் கொடுத்த தேர்தல் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை. டே-டு-டே அட்மினிஸ்ட்ரேஷனை (day-to-day administration) அட்மினிஸ்டர் பண்றதுக்கு எதுக்கு கால அவகாசம்?

கலைஞர் ஆட்சியில் 5 பொருட்கள் ரூ.50க்கு!

இப்ப விலைவாசி ஏறி இருக்குது. உணவுத்துறை அமைச்சரை கூப்பிடுங்க, புட் செக்ரட்டரியை (Food Secretary) கூப்பிடுங்க, எல்லா துறையையும் கூப்பிடுங்க, கூட்டுறவு துறையை கூப்பிடுங்க. உட்கார வைங்க, எப்படி இதை கட்டுப்படுத்தலாம்? நான் சொன்னேனே ஒரு எக்ஸாம்பிள் - முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் இருக்கும்போது இதை கட்டுப்படுத்துவதற்கு என்ன வழிமுறைன்னா, நாங்கள் 'ஸ்பெஷல் பிடிஎஸ்'னு சொல்லி 2007 ஜி.ஓ. எடுத்து பாருங்கள்.

2007-ல் ஸ்பெஷல் பி.டி.எஸ். ஜி.ஓ. போட்டு, இன்னொரு முக்கியமான விஷயம் - வெறும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மட்டும் கொடுக்கவில்லை. நாங்கள் ஸ்பெஷல் பிடிஎஸ்ல 15 பொருட்கள் 50 ரூபாய்க்கு கொடுத்தோம். கடுகு, சீரகம், மஞ்சள் - ஏன்னா குழம்பு தாளிக்கணும்ல? இதைக் கொடுத்தோம். இது தி.மு.க. செய்தது.

காரணம் - நிர்வாக திறன் இருக்கு, மக்கள் மேல அக்கறை இருக்கு. மக்கள் மேல அக்கறை இருந்தா முதலமைச்சர் கோட்டையில் உட்கார்ந்து இதைப் பற்றி பேசுவாரு. அக்கரையற்ற முதலமைச்சரா இருக்கு, இதுதான் பிரச்சினை."

செய்தியாளர்: "சார், இன்ஃப்ளேஷன்னால (inflation) தமிழ்நாட்டு பொருளாதாரத்துல விர்ச்சுவல் வாரியர்ஸ் (virtual warriors) வந்து ட்ரெண்ட் பண்ணிட்டு இருக்காங்க..."

பதில்: "இன்ஃப்ளேஷன்னா என்ன? அதாவது இன்ஃப்ளேஷன்னா என்ன, பணவீக்கம்னா என்னன்றத பொருளாதார ரீதியில் நான் சொல்றதை காட்டிலும், நேற்றும் இன்றைக்கு சமூக வலைத்தளங்களில் ரொம்ப அழகா ஒருத்தர் போட்டிட்டு இருக்காரு, அதையே நான் பதிலா சொல்றேன்.

முதலமைச்சர் ஒருத்தங்களோட கேக் வெட்டுற ஒரு போட்டோ வருது. முதலமைச்சருக்கு முன்னாடி ஒரு அஞ்சு கேக் இருக்கு. முதலமைச்சர் காசு கொடுத்து வாங்கினாரா இல்ல யாராவது வாங்கி கொடுத்தாங்களா அதைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. ஆனால், அந்த அஞ்சு கேக்கை எவ்வளவு ரூபாய்க்கு கொடுத்து வாங்கினாரோ, இந்த வருஷம் கேக் வெட்டினார் அஞ்சு கேக்க வச்சு, அதே காசை வச்சு அடுத்த வருஷம் கேக் வாங்குனாருன்னா மூணு கேக்குதான் வாங்க முடியும்; இல்ல அடுத்த மாசம் வாங்குனாருன்னா மூணு கேக்குதான் வாங்க முடியும். இதுதான் இன்ஃப்ளேஷன்.

ஒன்னும் பெருசா பொருளாதாரம்லாம் ஒன்னும் இல்ல. இன்னைக்கு 10 ரூபாய்க்கு நான் அஞ்சு பொருளை வாங்குறேன்னா, அதே 10 ரூபாய்க்கு நாளைக்கு மூணு பொருள் வாங்குறேன்னா, அதுதான் இன்ஃப்ளேஷன், பணவீக்கம். நான் ரொம்ப புரியற மாதிரி தவெக கட்சியில் இருக்கக்கூடிய பொருளாதார நிபுணர்களுக்கு சொல்லணும்னா, உங்க முதலமைச்சர் கேக் அஞ்சு கேக் வச்சு வெட்டினார் இல்ல, அது எவ்வளவு ரூபாய்க்கு காசு கொடுத்து வாங்கினாரோ, அதே காசுல நாளைக்கு போய் முதலமைச்சர் வாங்க சொல்லுங்க, வேற யாருக்காவது பிறந்தநாளுக்கு மூணு கேக்தான் வாங்குவார். இதுதான் இன்ஃப்ளேஷன்.

420 அரசாங்கம்!

அதாவது ஒன்னாம் நம்பர், 420 கவர்மெண்ட் இது. பப்ளிக்க ஃபிராட் (fraud) பண்றது - ஃபிராட் ஆன் தி டெமாக்ரசி (fraud on the democracy). ஒன்னு எம்.எல்.ஏ.-க்களை திருட்டுத்தனமா துட்டு கொடுத்து வாங்குறது, அப்புறம் தேர்தலை கொண்டு வந்து, இடைத்தேர்தலை கொண்டு வந்து அவங்களுடைய கவர்மெண்ட்டை தக்க வச்சுக்கிறது. இந்த கவர்மெண்ட்டே வந்து ஒரு திருட்டு கவர்மெண்ட்! எம்.எல்.ஏ.-வை திருடுது, மக்கள் வாக்குகளை திருடுது, மக்கள் பிரச்சனை பேசாம திருட்டுத்தனமா போய் ஒளிந்து கொள்கிறது.

யார் ஒழிவாங்க? யாராவது ஒரு பொருளை திருடிட்டு போய் ஒளிமிவாங்க. இப்போது மக்கள் முன்னாடி முதலமைச்சர் வராரா? வந்து, மக்கள் முன்னாடியா இருக்கக்கூடிய, மக்கள் ஜனநாயகத்தினுடைய நான்காம் தூணாக இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள் பார்த்து முதலமைச்சர் ஏதாவது பேசி இருக்கிறாரா? 'நான் என்னத்தைக் கிழிச்சேன் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்து?' அப்படின்னு ஏதாவது சொல்லியிருக்கிறாரா? ஒண்ணுமே இல்லையே! சோ, இது ஒரு ஃபிராட் கவர்மெண்ட் (fraud government) இது."

எத்தனைக் கூட்டம் கூட்டினார்கள்?

செய்தியாளர்: "பொருளாதார ஆலோசகர்கள் எல்லாம் சொல்லும்போது, அடுத்த ஒரு மூணு வருஷத்துக்கு கிரைசிஸ் (crisis) அதிகமா இருக்கும், லாங் டேம் கமிட்மெண்ட்டுக்கு (long-term commitment) போகாதீங்க அப்படின்ற அட்வைஸ்லாம் பண்றாங்க. விலைவாசி உயர்வு இப்போது அதிகமாயிட்டு இருக்கிறது. அப்ப அமைச்சரவையை கூட்டணும், அதில் விவாதிக்கணும், நீங்கள் சொன்ன பல துறைகள் எல்லாம் வந்திருக்கு, ஆனா அரசு கவனிக்காம இருக்கிற மாதிரி ஒரு சூழல் இருக்குன்னு பார்க்கிறீங்க..."

பதில்: "மாண்டேக் சிங் அலுவாலியா (Montek Singh Ahluwalia) தலைமையில் ஒரு கமிட்டி போட்டாங்களே, எத்தனை முறை கூட்டுனாங்க? எங்க தலைவர் அந்த கமிட்டியை கூட்டுனாரு, கமிட்டியில் யார் இருக்காங்கன்னு சொன்னாங்க, அந்த கமிட்டி எத்தனை முறை கன்வீன் (convene) பண்ணி அவர் அட்வைஸ் கேட்டாரு? அந்த கமிட்டி அட்வைஸ்ல அஞ்சு வருஷம் எங்களுடைய கவர்மெண்ட் என்ன பெர்பார்மன்ஸ் (performance) செய்திருக்கிறது என்று நாங்க ப்ரூஃப் பண்ணியிருக்கோம்.

அரசியலுக்கு லாயக்கற்றவர்கள்!

செய்தியாளர்: "தமிழகத்தைப் பொறுத்தவரையில அரசியலுக்காக மட்டும்தான் செயல்பாடு இருக்கு, நிர்வாக ரீதியாக எந்தவிதமான செயல்பாடும் இல்லைன்றீங்களா?"

பதில்: "அரசியல் ரீதியாக செயல்பட்டா கூட பரவாயில்லை சார், இவங்கல்லாம் ரீல்ஸ்தான் நடத்துறாங்க. அரசியல் என்பது என்ன? மக்கள் பிரச்சனையை பேசணும். அரசியலை கொச்சப்படுத்தக் கூடாது. அரசியல் என்றது மக்களுக்காக வந்து நிக்கணும்.

நாட்டு மக்கள் பார்க்கிறார்கள்!

செய்தியாளர்: "நிர்வாக ரீதியாக அதிகாரிகளை பயன்படுத்தலையா?"

பதில்: "புத்தி இருந்தாதானே சார் தெரியும்? ஒன்னு சொல்புத்தி இருக்கணும், இல்ல சுயபுத்தி இருக்கணும். எதுவுமே இல்லாத தத்திங்க உட்கார்ந்து இருக்கு தமிழ்நாட்டுல முதலமைச்சராகவும் அமைச்சர்களாகவும்! நாங்க சொல்லல முட்டாளுன்னு, அவங்கதான் சொல்றாங்க யாரை? மத்தவங்களை அவங்க முட்டாளுன்றாங்க. யார் யார் முட்டாளு அப்படிங்கிறதை நாட்டு மக்கள் இப்போ பார்த்துட்டுதான் இருக்காங்க."

ஆட்சி செய்ய தகுதி இல்லை!

செய்தியாளர் : "பொருளாதார நெருக்கடிங்கிறது தமிழ்நாட்டுக்கு மட்டும் விதிவிலக்கு இல்ல, இந்தியா முழுவதும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கு. குறிப்பா ரெப்போ இன்ட்ரஸ்ட் (Repo interest) எல்லாம் உயர்த்தி இருக்காங்க. தொடர்ந்து உலகம் முழுக்க கிரைசிஸ், எல்லாமே பாதிப்பு. இதுக்கு காரணம் தமிழ்நாட்டில் விஜய் ஆட்சி வந்தது மட்டுமே காரணம்னு சித்தரிக்கிறது எதிர்கட்சியோட செயல். அப்படின்னு சொல்றாங்க..."

பதில்: "ரொம்ப நல்ல கேள்வி. எசன்ஷியல் கமாடிட்டிஸ்க்கு (essential commodities) உலக அளவு - உலகளாவிய பொருளாதாரத்துக்கும் அதுக்கும் சம்பந்தம் கிடையாது. இதெல்லாம் அத்தியாவசிய பொருட்கள். இதுக்கும் நீங்கள் சொல்ற அந்த உலகளாவிய உக்ரைன் வாரோ (Ukraine war) எதுவோ, அதுக்கெல்லாம் சம்பந்தமே கிடையாது.

நான் சாதாரண பாமரனா இருக்கறேன், எங்க அப்பா சம்பாதிக்கிறாரு, அவரு வேலைக்கு போறாரு, காசு கொண்டு வராரு, அது என் குடும்பத்துக்கு போதுதா பத்தாதானு எனக்குத் தெரியாது; நான் குழந்தை, எனக்கு பசிக்குது, எனக்கு பிஸ்கட் வாங்கி கொடு, எனக்கு சாப்பாடு கொடுன்னுதான் நான் கேட்பேன். எங்க அப்பாவுடைய வேலை எனக்கு கொடுக்கிற வேலைதான். அதுதான் தமிழ்நாட்டின் அரசாங்கம், முதலமைச்சர். அதை விட்டுட்டு, 'அப்பாவுக்கு எங்க பிரச்சனை, அங்க பிரச்சனை'ன்னா, நீங்க பிள்ளையை வளர்க்கறதுக்கு லாயக்கற்ற ஒரு தந்தையாதான் இருக்கீங்க, ஆட்சி செய்வதற்கு உங்களுக்கு தகுதி இல்லைன்னு அர்த்தம்.

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.